பதிவுத்துறை

அனுப்புநர்
பதிவுத்துறைத்தலைவர்
100 சாந்தோம் நெடுஞ்சாலை
சென்னை 600 028.

பெறுநர்
துணைபதிவுத்துறைத்தலைவர்கள்
அனைவருக்கும்

எண்.5642/சிஎஸ்1/12 நாள்: .1.2016

ஐயா/அம்மையீர்,

பொருள்: இணையவழி/நேரிடையாக (online/ offline) பணம் செலுத்திடும் முறை (e payment) – தொடர்பாக.

பார்வை: இவ்வலுவலகக் கடித எண்.5642/சிஎஸ்1/12 நாள்: 7.1.2015, 12.2.2015.

* * *

2012-13-க்கான மானியக்கோரிக்கையில் அறிவிப்பு செய்யப்பட்டதன் தொடர்ச்சியாக அரசாணை எண்.157 வணிகவரி மற்றும் அரசுத்துறை நாள்:13.12.2012ன்வழி வங்கிகள் மூலம் துறைக்கட்டணங்களை இணையவழி/ நேரடியாக வசூலித்திட அங்கீகாரம் அளிக்கப்பட்டு 12.1.2015/19.1.2015/9.3.2015 முதல் இத்திட்டமானது தற்போது 6 வங்கிகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இம்முறையானது கூடுதல் விருப்பத் தெரிவு முறையாக அமையப் பெற்றுள்ளது எனவும் வரைவோலை மூலம் செலுத்தப்படும் தொகை அரசுக்கணக்கில் வரவு வைக்க ஏற்படும் காலதாமதத்தை குறைக்கவும் இத்திட்டத்தினை திறம்பட செயல்படுத்திட ஏதுவாகவும் ரூ.10 லட்சத்திற்கு மேலான கட்டணங்கள் தொடர்பாக இம்முறை மூலமாக வசூலித்திட நடவடிக்கை மேற்கொள்ளவும், இதனைச் செயல்படுத்திட தங்களது நேரடி கவனத்தினை முழுமையாக செலுத்திடவும் பார்வையில் கண்ட சுற்றறிக்கை வழி பயனுரை வழங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக சில நேரங்களில் சில சார்பதிவகங்களில் இம்முறை மூலமாக மட்டுமே துறைக்கட்டணங்கள் செலுத்திட வலியுறுத்தப்படுவதாகவும் அதனால் தங்களது பதிவு மேற்கொள்வதில் ஏற்படும் கால விரையம் மற்றும் இன்னும் பிற சிரமங்கள் குறித்து சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்து புகார்கள் வரப்பெற்றுள்ளது.

பார்வையில் கண்ட 7.1.2015 நாளிட்ட சுற்றறிக்கையில் வங்கிகள் மூலம் துறைக் கட்டணங்களை இணையவழி / நேரடியாக மட்டுமே வசூலித்திட வேண்டும் என்று குறிப்பிடப்படவில்லை. இச்சுற்றறிக்கையின் நோக்கமானது இந்த சிறப்புத்திட்டத்தினை மக்கள் மத்தியில் நன்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்பதே தவிர, இம்முறையை கட்டாயமாக்க வேண்டும் என்ற நோக்கில் இல்லை என்பதும் தெளிவாக்கப்படுகிறது. மேற்கண்டவாறு துறைக்கட்டணங்களை வசூலிப்பது ஒரு விருப்பத் தெரிவு முறையாக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்றும், ஏற்கனவே நடைமுறையில் இருந்த வரைவோலை மூலம் மற்றும் கருவூலத்தில் நேரடியாக பணம் செலுத்தி செலுத்துச் சீட்டை அளித்து துறைக்கட்டணங்களை செலுத்துவதையும் அனுமதிக்கலாம்.

ஒம்../29.01.2016

பதிவுத்துறைத்தலைவர்

29/1/16

பதிவுத்துறைத்தலைவருக்காக